முருகப்பெருமான் துணை

**உலக ஞானத் தலைவன் முருகப்பெருமான் அருளிய அருள்வாக்கு**

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1682

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**07.05.2024,** செவ்வாய்கிழமை

1. தர்ம ஞானியே அரங்கா வாழ்க
   தவசியாய் உலகோர்க்கு ஞானம் அருள
   ஆறுமுகன் என் அவதாரமாக வந்த
   அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
2. யானுமே ஞான அறிவுரை ஆசி
   உயர்வாய் குரோதி தகர் திங்களில் உரைப்பேன்
   (குரோதி வருடம் சித்திரை மாதம் 24 ம் நாள், 07.05.2024, செவ்வாய்கிழமை)
   ஞானவான் அரங்கன் உன் வழிதான்
   ஞானப்படைகள் உலகமெல்லாம் உருவாகி
3. வானவர்கள் மெச்ச உலகமாற்றமாக
   வையகத்தில் தர்ம ஞான ஆட்சிக்காலம்
   காலமதும் அரங்கன் சீடர்களைக்கொண்டே
   ஆறுமுகன் யான் அற்புதமாய் நடத்துவேன்
4. வருங்காலம் ஞானவான்களுக்கும் தர்மவான்களுக்கும்
   வல்லமைகொண்ட வாய்ப்பு நிறைந்த காலமாக மாறி
   பெருமைபட அரங்கன் அவதார நோக்கமாக
   பேருலகம் மாற்றங்களைக் காணக்கூடும்
5. கூடவே அரங்கனுக்கு மேலும் சக்தி கூட்டிட
   குறைவின்றி ஆறுமுகப்பெருமான் யான்
   நிறைவாக பிரம்மவேளைதோறும் நிலமதனில்
   சூட்சும சக்தி ஊட்டி வர
6. வருகவே அரங்கன் பேரில் வையகமெங்கும்
   வல்லமைபட செய்கின்ற தர்மமே
   அரங்கனுக்கு அதீத சக்தி ஊட்டி
   அரங்கன் நோக்கத்தையும் உலகளவில் கொண்டு சென்று

7. இனிதே உலகமெங்கும் அரங்கன் அவதாரத்தின் மகிமை
பெருமை அறியப்பட்டு அற்புதம் காணக்கூடும்
அன்னதனால் உலகோர் அரங்கன் திருவடி பற்றி
ஆசான் உபதேச நெறிமுறைகளை
8. வரமாக ஏற்று வையகமெங்கும் பரப்ப
வடிவேலன் யான் உகந்தபடி முன்னின்று வழி நடத்தி
உலகோர்க்கு ஞானத் தலைமையையும்
ஞான ஆட்சிக்காலத்தையும் உருவாக்குவேன்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–